# <u>இராஜராஜன் பொறியியல் கல்லூரியில் கருத்தரங்கம்</u>

கணிப்பொறி அறிவியல் பொறியியல் துறை சார்பாக தேசிய அளவில் தொழில்நுட்ப கருத்தரங்கம் (Symposium) BYTE FUSION ’24 , **30.04.2024, செவ்வாய் கிழமை** அன்று நடைபெற்றது.

கல்லூரியின் ஆலோசகரும், அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர்.S.சுப்பையா தலைமை தாங்கினார். அவர் கூறுகையில் பல்வேறு ஆராய்ச்சி கட்டுரைகள் இங்கு விவாதிக்கப்படுகிறது, அதில் கூறியுள்ள தற்போதைய கணிப்பொறி அறிவியல் சம்பந்தமான தொழில்நுட்பங்கள் மற்றம் கருத்துகள் கலந்து கொண்ட அணைத்து மாணவர்களுக்கும் சென்றடையும் இது போன்ற கருத்தரங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று கூறினார்.

சிறப்பு விருந்தினராக புகழ் பெற்ற சமூகவலைத்தளத்தின் தன்னம்பிக்கை பேச்சாளர் திரு. J.முத்துக்குமரன் அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில் மாணவர்கள் தங்களை நேசித்து விருப்பதுடன் தனது கனவை நோக்கி பயணித்தால் வெற்றி பெறலாம் என்றார்.

கருத்தரங்கு கட்டுரை ஆராய்ச்சியாளராக முனைவர். A.அய்யாசாமி, துறைத்தலைவர், கணிப்பொறி பொறியியல் துறை, அழகப்பா பாலிடெக்னிக் கல்லூரி, காரைக்குடி கலந்து கொண்டு பேசுகையில் மாணவர்கள் எதிர்கால தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவு (A.I.) நேர்த்தியாக கற்று வாழ்வில் வெற்றியை வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கிற்கு பல்வேறு பொறியியல் கல்லூரியில் இருந்து 50க்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர்.

இவ்விழாவில் கல்லூரியின் டீன் முனைவர். M.சிவக்குமார், ஆசிரியர் மேம்பாட்டு அலுவலர் திரு. K.C.பழனிவேலு, துணை முதல்வர் திரு. V.மகாலிங்க சுரேஷ், ஸ்ரீ இராஜராஜன் சி.பி.எஸ்.இ பள்ளி முதல்வர் திருமதி M.வடிவாம்பாள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மற்றும் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். கணிப்பொறி பொறியியல் துறை தலைவர் திரு. R.சுசில்குமார் நன்றி கூறினார்.

